ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

16.10.2025

1. சுத்த சன்மார்க்கம் தழைக்கவே
சுப்பிரமணியப் பெருமான் தானும்
சத்திய ஞானசபையாக பிரணவக்குடிலை
சகலரும் வந்தணுகி தேறவே

2. தேறவே அரங்கமகான் எந்தனை
தேற்றும் குருவாக நியமித்து
அறமோடு சன்மார்க்க வழிகாட்டி
அற்புதம் தன்னை நிகழ்த்தி வர

3. வருகவே அரங்கனும் சரவண சோதியில்
வீற்றுமே அருளாசி வழங்கிவர
குருவார அருளாசியாக இன்று
கூறிடுவேன் விசுவாவசு நங்கை திங்கள்

4. நங்கை திங்கள் பஞ்சகுருவார ஆசி
நாட்டிடுவேன் என் மக்கள் தேறிட
ஓங்காரன் உள்ளிருந்து அருளும்
ஓங்காரக் குடிலை மக்களெல்லாம் தேடி

5. தேடிவந்து சரணாகதி அடைந்து
தேவாமிர்த அருளமுது உண்டு
தேடிக் கண்டேன் என சோதியில்
தேசிகன் என்னை அடையாளம் காண

6. காணவே மனமுருகி வேண்டிட
காட்சியாக அரங்கனும் கிட்டி
ஞானமும் நல்வரமும் தருவேன்
நம்பிக்கைபட என் வழி தொடர

7. தொடரவே வேண்டுதல் யாவும்
தொடர்ந்து வெற்றி கண்டுமே
இடரில்லா இடை கண்டமில்லா
எல்லா பாதுகாப்பும் அடைந்து

8. அடைந்துமே வாழ்வில் சிறப்பர்
அறமென அரங்கன் யானும்
தடைவெல்ல வகுத்த அன்னதான
தருமவழிகள் தனை ஏற்றுமே

9. ஏற்றுமே பொருளுதவி செய்து
என் சீடன் ராம்குமார் கரம்பட
ஆற்றல் மிகு தீட்சை அடைந்து
அதன்வழி நித்ய பூசையாக

10. ஆகவே ஞானிகள் நாமசெபம்
அளவிலா எண்ணிக்கை போற்ற
மகான்கள் எல்லாம் வந்தருளிட
மாற்றங்கள் பல வாழ்வில் அடைந்து

11. அடைந்துமே வந்த நோக்கம்
அறிந்துணர்ந்து ஞானியாகவே
தடைவென்று தன்னையே தேற்றும்
தனித்துவமும் கண்டு சிறப்பர்
அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி